உ

கடவுள் துணை.

பணமரசோபனம்.

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1922.

47

கடவுள் துணை.

பனைமரசோபனம்.

சோபனமடிசோபனமே சிவசோபனந்தமிழ்பாட
அச்சோடிபெண்களாசோபனமே அம்மாடிபெண்களாசோபனமே
பனைமரமேபனைமரமே யேன்வளர்ந்தாய்பனைமரமே
நான்வளர்ந்தகாரியத்தை நாட்டாரேசொல்கிறேன்கேள்
அறியாவிட்டால்சொல்லுகிறேன் அச்சோடிபெண்களாசோபனமே
தெரிவிட்டால்சொல்லுகிறேன் தேசமெங்கும்சோபனமே
பாரமரியாயிருக்காமல் பட்சமுடன்கேட்டிருங்கள்
படுக்கப்பாய்நானாவேன் பாய்முடையதோப்பாவேன்

வெட்டநல்லவிறகாவேன் வீடுகட்டவாரையாவேன்
பட்டுப்போறபயிர்களுக்கு பலத்தநல்லவேத்தமாவேன்
அட்டடுக்குபெண்களுக்கு அடுப்பெரியமட்டைவாவேன்
கட்டநல்லகயிராவேன் கன்றுகட்டதும்பாவேன்
மட்டமுள்ளவுரியாவேன் மாடுகட்டதும்பாவேன் ”
பசுவணைக்குங்கயிராவேன் பால்தயிருக்குரியாவேன்
வாரவட்டைநாணுவேன் வலச்சல்களுந்தாணுவேன்
தொட்டிலுக்குகயிராவேன் துள்ளியாடவஞ்சலாவேன்
கிணத்துஜலமொண்டுவரக் கைதாம்புக்கயிராவேன்
பலத்தசுமைபாண்டங்கட்குப் பிரமணையுந்தாணுவேன்
ஏழைநல்லமங்கிலிக்கு யேற்றக்காதோலையாவேன்
மங்கிலியப்பெண்களுக்கு மஞ்சள்பெட்டிநாணுவேன்
பாக்கியமுள்ளபெண்களுக்கு பாக்குபெட்டிநாணுவேன்
விர்த்தாப்பியபெண்களுக்கு வெற்றிலைபெட்டிநாணுவேன்
குணமுள்ளபெண்களுக்குக் குங்குமப்பெட்டிநாணுவேன்
பெரியோர்கள்தோள்மேலே திருப்பக்குடைநாணுவேன
திருப்பக்கூடைக்குள்ளிருக்கும் திருமணபெட்டிநாணுவேன
திருப்பாவைசேவிப்போர்க்கு திருத்துழாய்ப்பெட்டிநாணுவேன
எழுதுகினறபிள்ளைகட்கு யெழுத்தாணிகூண்டாவேனு

வாசிக்கின்றபிள்ளைகட்கு வண்ணநல்லதடுக்காவேண
ஓதுகின்றபிள்ளைகட்கு ஓலைத்தடுக்காவேன
நனைந்துவருவார்க்கு ஐம்பங்குடைடானுவேன
பசித்துவருவார்க்குப் பனம்பழமுநானுவேன
களைத்துவார்க்கு கள்ளமுதம்நானுவேன
பாலர்பெரியோர்க்குப் பனம்பதநீர்நானுவேன
சித்திரைக்கோடையிலே சிறந்தநல்லநுங்காவேன
காளையர்க்குங்கன்னியர்க்குங் களைதீர்க்கும்விசிறியாவேண
கண்டப்பிள்ளைதாய்மார்க்குக் கற்பகக்யட்டிநானறுவேண
வேலிகட்டகயிறாவேண விறகுகட்டநாராவேன
வருஷத்துக்கோர்தினத்தில் சரஸ்வதியம்மனபூசைசெய்து
ஆமெழுகிகோலமிட்டு அச்சோடிபெண்களாசோபனமே
மணையலம்பிகோலமிட்டு மணைநிறையபுராணம்வைத்து
பூவும்புதுமலரும் பொன்னாகும்அட்சதையும்
அட்சதையுமலரெடுத்து அர்ச்சிப்பாருலகமெல்லாம்
விஸ்தாரமாய்ரண்டாநாள் விஜயதசமியென்றுசொல்லி
ராநட்டிலுள்ளபிள்ளைகட்கு நாள்பார்த்துமுகூர்த்தமிட்டு
எண்ணெய்த்தேய்த்துநீராட்டி யியல்புடனேயலங்கரித்து
மாலைபோட்டுசந்தனம்பூசி மடியநிறையபுஸ்தகம்வைத்து

பசங்கள்படித்துவர மங்களங்கள்பாடிவர
காம்புநறுக்கியவர் கணுக்காம்புவேறறுத்து
பக்கமிருபுரம்வாரி பல்வரிசைகாம்பரிந்து
எனைத்திருத்தியவர் எழுத்தாணிகைபிடித்து
ஆணிப்பொனனெழுத்தாணி அழகாகவேபிடித்து
வெள்ளிகட்டெழுத்தாணி வேடிக்கையாய்கைபிடித்து
ஆரியரும்வேதியரும் ஹரிநமோவென்றெழுதி
ஹரிஹரியென்றெழுதி அர்ச்சிப்பாரெனையவர்
அரிச்சுவடியென்னாலே வரிக்காய்பாடமென்னாலே
எண்சுவடியென்னாலே குழிமாற்றுமென்னாலே
தர்க்கங்களென்னாலே சாஸ்திரங்களென்னாலே
இராமாயணமென்னாலே பாரதமுமென்னாலே
பாகவதமென்னாலே பலசாஸ்திரங்களென்னாலே
திருவாய்மொழியென்னாலே திவ்யபிரபந்தமென்னாலே
நாலுவேதமுமென்னாலே ஆறுசாஸ்திரமென்னாலே
கங்கைக்கும்லங்கைக்கும் கீர்த்திமிகப்பெற்றிருப்பேன
மங்கையர்க்குமன்னவர்க்கு மனமறிவதுமென்னாலே
வர்த்தகருஞ்செட்டிகளும வழியறிவதுமென்னாலே
கணக்கர்களுமுதலிகளுங் கணக்கறிவதுமென்னாலே

பலசரக்குமண்டிகளில் பத்திரமாய்நானிருப்பேனே
காசிக்கடைசவுளிக்கடையில் கருத்துடனேநானிருப்பேனே
கொடுக்கல்வாங்கலுள்ளவர்க்கு குறிப்புசொல்லிவாங்கிவைப்பேனே
கார்த்திகைமாதத்திலே கருத்தறிந்தபிள்ளைகட்கு
திருத்தமுள்ளமாபலியாய்த் தெருவெங்குஞ்சுற்றிடுவேனே
பட்சமுள்ளவாசலுக்கு பட்டோலைநானாவேனே
காதத்துப்பெண்களுக்குக் காதோலைநானாவேனே
தூரத்துப்பெண்களுக்குத் தூதோலைநானாவேனே
கலியாணவாசலுக்குக் கட்டோலைநானாவேனே
சீமந்தவாசலுக்கு சீருடனேநானபோவேனே
பிள்ளைபிறந்ததென்றால் பெருமையுடனநானபோவேனே
மைந்தனபிறந்தானென்றால் மகிழ்ச்சியுடனநானபோவேனே
அரண்மனையில்நானிருப்பேனே ஆஸ்தானத்தில்நானிருப்பேனே
மச்சுள்ளேநானிருப்பேனே மாளிகையில்நானிருப்பேனே
குச்சுள்ளேநானிருப்பேனே குடிசைக்குள்ளேநானிருப்பேனே
எருமுட்டைகுதிரையெல்லாம் ஏந்திகொண்டுநானிருப்பேன்
எரிக்கரைமேலே என்னாளும்வீற்றிருப்பேனே
எமலோகம்போனாலு மெல்லவர்க்குந்தெரியவைப்பேன்
சிவலோகம்போனவர்க்கு சீட்டோலையாயிருப்பேனே

சகலமானகாரியத்துக்கும் சாக்கிரதையாயிருப்பேன்
இத்தனைக்குமுதவியென்று என்னையன சிருஷ்டித்தான
கற்பகவிருட்சமெனக் கெலையினுந்தானமர்ந்தேன
திருப்பாளையூர்தனனிற் சிவனபுனைந்தானெந்நாமம்
நானவளர்ந்தசேதிதனை நலமுடனேகேட்டவரும்
பாடிப்படித்தவரும் பட்சமுடனகேட்டவரும்
சொல்லிப்படித்தவரும் சுகிர்தமுடன்கேட்டவரும்
அச்சிலடித்தவரும் அழகுசெனனையாள்பவரும்
எல்லையுலகளந்த வெம்பெருமானகோத்திரம்போல்
ஆல்போலேதழைத்து ஆதிசிவனபோல்வாழ்வார்
ஊழியூழிகாலமட்டும் உலகுதனிலேயிருந்து
வாழிவாழியெனறுசொல்லி வரமளித்தாரீஸ்வரனும்

பனைமரசோபனம்

முற்றிற்று.